தமிழர் நேசன்

(தமிழர் கல்விச்சங்கத்துப் பத்திரிகை)

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு—திருக்குறள்.

தொகுதி VII. } ருதிரோத்காரி௵ ஆனி௴ { பகுதி 3.

கைத்தொழிற் பள்ளிக்கூடங்கள்

Apprentice Schools.

சுமார் ஐம்பது வருஷங்களாய் ஆராய்ச்சி செய்ததின் பயனாக தொழிற் பள்ளிக்கூடங்களில் மாணவர்களைக் கொண்டு ஜனங்களுக்கு வேண்டிய வேலைகளைச் செய்வித்துப் பயன் படக்கூடியவையான சமான்களைத் தயாரிக்கச் செய்வதே அந்த மாணவர்களை நன்கு படிப்பிக்கும் முறை என்று அறிந்துகொண் டிருக்கின்றனர். வேலைகற்றுத் தேர்ச்சி யடையாத மாணவர்களுக்கு நற்பண்டங்களைக் கொடுத்து அவைகளில் வேலை செய்யப்பண்ணி, பிறர் விலை கொடுத்து வாங்கக்கூடிய சாமான்களாகச் செய்விக்க முயலுவது கடின்மே. வேலையில் தேர்ச்சி யுறாதவர் வேலை செய்வதால் பண்டங்களுக்கு நாசம் உண்டாகும்; வேலை செய்து தயாரித்த சாமான்களும் விலை கொடுத்து வாங்கும்படியான சிறந்த வேலைப்பாடின்றி இருக்கக்கூடும்; சில சாமான்கள் சேடுற்று

பயனற்றவையாய்விடும். ஆயினும் போலிவேலைகளை கற்பித்து படிப்படியாக பாடங்கள் ஏற்படுத்தி ஆயுதங்களை உபயோகப் படுத்தக்கற்பதற்கு மட்டும் வேண்டிய விதமாகப் பயனற்ற சாமான்களை செய்யச்சொல்வதால் எவ்விதமான நஷ்டமும் உண்டாகாது என்றாலும் மாணவர்களுக்கு உலகத்தில் பிர யோஜனப்படக்கூடிய வேலைகளைக் கற்பதிலுள்ள ஊக்கமும் உற்சாகமும் இவ்விதப்பயனற்ற செய்கைகளில் இராது; ஆகை யால் அவர்கள் படிப்பும் ஏனைய பள்ளிக்கூடப் படிப்பைப் போலவே, உலகவாழ்க்கையில் பயனற்றதாக முடியும் வியா பாரத்திற்குரிய சமான்களைத் தயாரிப்பதிலும் சிலவேலைகள் அதிசுலபமானவையாகவும் படிப்படியாக பழகிப் செய்யக் கூடியவேலைகள் சிலவுமாய் இருக்குமாதலால் பயனற்ற போலி வேலைகளில் மாணவர்களை ஏவுவதைவிட நிஜமான வேலை களையே செய்யப்பழக்குவது மேல் என்பது தொழிற் பள் ளிக்கூடங்களை நடத்திவந்த அதிகாரிகளின் அநுபவம்.

உதாரணமாக, கல்கத்தாவுக்கு வடக்கே சுமார் ஐந்து மைல் தூரத்திலுள்ள பாராநகூர் என்கிற ஊரிலிருக்கும் கைத் தொழிற் பள்ளிக்கூடத்தை எடுத்துக் கொள்வோம்.

இந்த பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்பட்டு சுமார் 18 வரு ஷங்களாகின்றன 30, 40 பிள்ளைகள் இதில் வேலை கற்கிறார் கள். இவர்கள் பித்தளைப் பூட்டுகள், திருகாணிகள், தாழ்ப் பாக்கள், வெங்கல சாமான்கள் பித்தளையில் விசித்திர வேலை கள், முதலிய பலவித வேலைகளில் பழக்கப்படுகிறார்கள். பத்துப்பத்து பையன்களை மேற்பார்த்து அவர்களுக்கு வேலை செய்யும்வழியைக் காட்டிக்கொடுத்து வேலை வாங்குவதற்கு தேர்ச்சி பெற்ற தொழிலாளி ஒருவனை நியமித்திருக்கிறார்கள். இந்த மாணவர்களை பயன்படக்கூடாத வேலை யொன்றிலும் பழக்குவதில்லை, வேலைகெட்டால் சாமான்களை வீணாக எறிந்து

விடும்படி நேரிடுமாயின் வியாபாரத்திற்கு யோக்கியமான சாமான்களைத் தயாரிக்கச் செய்வதுதான் பையன்களை ஊக்கத்துடன் மனம் செலுத்தி உழைக்கச்செய்யும் என்று பையன்களுக்கு உத்சாகம் உண்டாவதற்காக அவரவர்கள் செய்த வேலைக்குத்தகுந்தவாறு கூலியும் கொடுத்து உதவுகிறார்கள். ஒரு பித்தளைப் பூட்டுச்செய்தால் வெளியில் கூலி எட்டு அணுக்கொடுப்பார்கள் என்று வைத்துக் கொள்வோம் அதற்கு வேண்டிய பித்தளையையும் கருவிகளையும் ஒருபையனிடம் கொடுத்து அவனுக்கு பூட்டுச்செய்யும் வழியையும் காண்பித்து பூட்டு செய்தானபின் வேலை சரியாக இருந்தால் அதற்குள்ள கூலி எட்டு அணுவை அவனுக்குக் கொடுக்கிறார்கள். அந்த வேலை நல்ல தொழிலாளியால் ஒரு நாளில் செய்து முடிக்கக்கூடியதாயிருக்க இந்த பள்ளிக் கூடத்தில் கற்கும் மாணவர் அதை மூன்று நாளில் செய்து முடித்தால் அவனுக்கு நாட்கூலி குறைவாகின்றது. இவ்விதம் வேலைக்குத்தக்கபடி கூலி குறைந்து கூடுவதால் உலகத்தில் பிறருடன் போட்டியாக வேலைசெய்து கூலி சம்பாதித்துப் பிழைப்பதற்கு வேண்டிய மனோதைரியத்தில் ஆரம்பமுதல் பழகுகிறான். வேலையில் சிரத்தையும் சுறுசுறுப்பும் உண்டாகின்றது. இப்படிக் கில்லாமல இவர்கள் செய்யும் வேலைக்குத் தகாத கூலி அதிகம் கொடுத்துப்பழக்கினால் பள்ளிக் கூடத்தை விட்டுச்சென்ற பின்பும் விசேஷ ஆதரிப்பை எதிர் பார்த்து ஏமாறுவார்கள்; நாம் எங்கு சென்றாலும் வேலை செய்து பிழைக்கலாம் என்ற தைரியமும் அவர்களுக்கு உண்டாகாது.

இந்தப் பள்ளிக் கூடத்திற்கு சர்க்கார் கொடுக்கும் (Grant) பொருளுதவி சொல்பமே. இங்கு உபயோகிக்கப் படும் இயந்திரங்களில் பல கல்கத்தா வியாபாரிகள் இனமாக

அளித்தவை. இதை நடத்திவருபவர் வரும் கோஷாப்பெண்டிர் மிஷன் அதிகாரிகள். அவர்கள் பணம் இதில் செலவிடப்படுவ தில்லை. இந்தப் பள்ளிக்கூடம் சுய வருமானத்தினின்றே நடத்தப்படுகிறது.

மேற் சொன்ன மிஷன் அதிகாரிகள் கைம்பெண் களுக்குக் கைத்தொழில் பள்ளிக்கூடம் ஒன்று பாரா நாகூரில் நடத்தி வந்தார்கள். அங்கு அடைந்த நிஸ்தரணி என்ற வங்காள விதவையின் மகன் அமிர்தன் என்பவனே இந்த தொழிற் சாலையை ஸ்தாபித்தவன். அவன் பாலியத்தில் கல்கத்தா பள்ளிக்கூடத்தில் சில வருஷங்கள் வாசித்தபின் மேல் படிப்புக்கு உதவுவாரின்றி சர்க்கார் துப்பாக்கி சாலையில் கம்மான் (Engraver) வேலையில் அமர்ந்தான். அங்கே விடா முயற்சியாலும் நல்லுழைப்பாலும் மேன் மேலும் உயர்ந்த பதவியை யடைந்தான். அவன் ஒரு நாள் பாரா நாகூருக்குச் சென்றபோது அங்கே மிஷன் பள்ளிக் கூடத்தை நடத்தி வந்த உபாத்தியாயினி சிறு பிள்ளைகளுக்கு ஏதாவது கைத்தொழில் சற்று உன்னால் சொல்லிக்கொடுக்க முடியுமா? என்று கேட்க "ஆகட்டும்" என்று ஒப்புக்கொண் டான் அமிர்தன்.

தான் நடத்தும் கைத்தொழிற் பள்ளிக்கூடம் பிறர் உதவியை எதிர் பாராமல் சுய வருமானத்தினின்றே நடத்தப் பட வேண்டும் என்று முயன்றான் அமிர்தன். ஆரம்பத்தில் இயந்திரங்கள் சில வாங்குவதற்காக கொஞ்சம் ரூபாய் மட்டும் மிஷனிலிருந்து கடனாக வாங்கிக் கொண்டான், வெளியில் தனக்கு மாதம் ரூ 50, 60 கிடைக்கக் கூடியதா யிருக்க அதைவிட்டு தன் செலவிற்காக மாதம் ரூ 10-மட்டும் எடுத்துக்கொண்டு அந்த பள்ளிக்கூடத்திற்காக தன் ஆயுள் முழுவதும் விடாமுயற்சியுடனும் தெய்வ நம்பிக்கையுடனும் உழைத்து வந்தான்.

இப்பொழுது ஒரு வருஷத்தில் சுமார் 35000 ரூபாய் வரவு செலவாகிறது. பையன்களுக்கு அவரவர் வேலைக்குத் தகுந்தபடி மாதம் ரூ 20-முதல் ரூ 100-வரையில் கொடுக்கப் படுகிறது. பள்ளிக்கூடத்துக்கடைசி குமாஸ்தாவின் சம்பளம் பள்ளிக்கூடத்து மாணவர்களுக்கு இரவில் எழுதப் படிக்கச் சொல்லிக் கொடுக்கும் உபாத்தியாயர்களுக்கு சம்பளம், சாயங்காலத்தில் பாட்டுச் சொல்லிக் கொடுக்கும் உபாத்தி யாயருக்கு சம்பளம் இவை கொடுத்தானபின் சிறுவர் களுக்கு இமைாகத் துணிகளும் உணவுகளும் உதவு வதற்கும் தேவையான புதிய ஆயுதங்கள் வாங்குவதற்கும் பழைய ஆயுதங்களை சீராக்குவதற்கும் வேண்டிய பணமும் இந்தப் பள்ளிக்கூடத்து மாணவர்களின் கைத்தொழிலால் வரும் இலாபத்தினின்று கிடைக்கின்றது.

இவ்விதம் பள்ளிக்கூடம் ஒன்று வங்காளத்தில் பாரீட் பூரில் (Faridpur) இருக்கிறது அங்கே தச்சு வேலை கற் பிக்கப்படுகிறது. அங்கேயும் மாணவர்களுக்கு வேலைப் பழக் கம் மட்டு மல்ல, பழகும்போதே சம்பாதிக்கக்கூடிய வேலை களில் பழகி சம்பாதிக்கவும் கற்றுக் கொடுக்கிறார்கள். ஒவ் வொரு பையனும் தனக்குக் கிடைக்கும் கூலியிலிருந்து சாப் பாடு துணி முதலியவற்றிற்கு செலவிடுகிறான் மிகுந்ததை பள்ளிக்கூட "பாங்கி" யிலே போட்டு பள்ளிக்கூடத்தை விட்டு வெளிச் செல்லும்போது தனக்கு வேண்டிய தச்சு ஆயுதங்களை வாங்கிக் கொள்ளுகிறான்.

ஒரு தொழிலாளியிடம் சிற்றாளாக அமர்ந்து, அவ னிட்ட வேலைகளை யெல்லாம் செய்து தனக்கு ஊக்கத்தோடு வேலை கற்பிப்பாரின்றி சிறுகச் சிறுக அவகாசம் ஏற்பட்ட போது வேலைகளில் பழகி கொண்டு கைத்தொழில் கற்பதற்கு நம்மவர் பின் வாங்குவது ஸகஜமே. அப்படிக்கின்றி வேலையில்

தேர்ந்த ஒருவனுக்கு சம்பளம் கொடுத்து அவனிடம் பத்து பன்னிரண்டு பையன்களைப்பழகவிட்டு அவனைக்கொண்டு அப்பையன்களுக்குத் தரம் தரமாகவும் படிப்படியாகவும் வியாபார முறையில் பயன் படக் கூடியதான நிஜ வேலைகளைச் செய்து முடிக்கக் கற்பித்து, அப்படிச் செய்யப்பட்ட வேலைகளுக்குத் தகுந்தவாறு வெளியில் கிடைக்கக்கூடிய விகிதம் அந்த மாணவர்களுக்குக் கூலி கொடுத்து அவர்களை உற்சாகப்படுத்தி; போட்டி மிகுந்த இவ்வுலக வாழ்க்கையில் சுதந்தரராய் வேலை செய்து பிழைக்கத் தைரியங் கொண்டவர்களாக்கும் இவ்விதப் பள்ளிக்கூடங்கள் அநேகம் நாடெங்கும் ஸ்தாபிக்கப் படவேண்டும்.

மண்ணுணி.

The Earth-worm.

காலஞ் சென்ற பிரோபஸர் P சுந்தரம்பிள்ளை M. A.
இயற்றிய மனோன் மணீயம் என்னும் நாடகத்தி லிருந்து
எடுக்கப்பட்டது.

ஓகோ! நாங்கூழ்ப் புழுவே யுன்பா
டோவாப் பாடே உணர்வேன்! உணர்வேன்!
உழைப்போ ருழைப்பி லுழுவோர் தொழின் மிகும்.
உழுவோர்க் கெல்லாம் விழுமிய வேந்துநீ.
எம்முன் ணாயினு நன்மண் ணாக்குவை.
விடுத்தனை யிதற்கா, எடுத்தவுன் யாக்கை.
உழுதுழு துண்டமண் மெழுகினு நேரிய
விழுமிய சேறாய் வேதித் துருட்டி
வெளிக்கொணர்ந்தும், புகழ் வேண்டார் போல
வொளிக்குவை யுண்டுழி வாயுமொரு ருண்டையால்!
இப்புற் பயிற்நீ யிங்ஙன முழாயே
லெப்படி யுண்டாம்? என்னா துனக்குங்
குறும்புசெய் யெறும்புங் கோடி கோடியாம்
புழுக்களும் பூச்சியும், பிழைக்குமா றென்னே!
ஒழுக்கமும் பொறையு முனைப்போ லியார்க்குள?
விழுப்புகழ் வேண்டலை. அறிவோம். ஏனிது?
துதிக்கலம். உன் றொழினடத்துதி ஆ. ஆ.
எங்கு மிங்ஙனே யிணையிலா வின்பும்
பங்க மிலன்புந் தங்குதல் திருந்தக்
காணார் பேணும் வாணா ளென்னே!

டான் க்விக்ஸாட்டின் விசித்ராநுபவங்கள்.

The Adventures of Don Quixote.

சென்னைக் கிறிஸ்தவன் கலாசாலையில் ஆசிரியாயிருக்கும்
ஸ்ரீமான் R ரங்காசாரியார், M. A., L. T., ஆங்கிலக்
கதையின்று தொகுத்து எழுதியது.

(ii) டான் க்விக்ஸாட் பட்டம் பெற்றது.

அன்று முழுதும் டான் க்விக்ஸாட் சவாரிசெய்து மாலை குறுகலும் ஒரு சத்திரத்தை யடைந்தான். அவன் கடும்பிரயாணத்தால் சோர்வடைந்தான். பசியால் மிகவும் வாடினான். குதிரையும் களைத்துப் போய் விட்டது. சத்திர வாயிலில் இரண்டு ஸ்திரீகள் நின்று கொண்டிருந்தனர். பக்கத்தில் சில கூலிக்காரர் காத்திருந்தனர். ஸெவில் நகர் நோக்கிப் பிரயாணம் செய்துகொண்டிருந்த அம்மாதரிருவரும் இரவில் அந்தச் சத்திரத்தில் தங்கிப் போகவேண்டியதாயிற்று.

அச்சத்திரத்தைக் கண்டதும் க்விக்ஸாட் அதனை யொருகோட்டை யென்று மதித்தான். அக்கோட்டை வெள்ளிச் சிகரங்களின்றும் கண்ணைப் பறிக்கும்படி வீசிய காந்தியுடன் பிரகாசிக்கும் நான்கு கோபுரங்களோடும் இழுவைப் பாலத்துடன் கூடிய ஆழ்ந்த அகழினாற் சூழப்பட்டு மற்றைய அரண்களோடும் விளங்குவதாக அவன் நினைத்துக் கொண்டான். அக்காலத்து வழக்கப்படி பெரிய வீரனை தன்வரவை யறிவிக்க குறளொருவன் கோட்டைத் தளங்

களின் மீதிருந்து பூரிகை முழங்குவானென்று டான் க்விக்ஸாட் ஆவலோடு எதிர்பார்த்திருந்தான்.

அச்சமயத்தில் பன்றி மேய்ப்போனொருவன் வயற்கண் மேய்ந்து கொண்டிருந்த விலங்குகளை ஒன்று கூட்ட வெண்ணித் தன்னிடமிருந்த குழலையெடுத்து ஊதினன். அவ்வொலி கேட்டதும் க்விக்ஸாட் மனம் பூரித்துக் குதிரையை வாயிலுட் செலுத்தினன். இதனைக் கண்ட பெண் மணிகள் பயந்து அவ்விடம் விட்டு ஓடமுயன்றனர். க்விக்ஸாட் மிகவும் மரியாதையுடனும் வணக்கத்துடனும் அவர்களை நோக்கி "சீமாட்டிகளே, ஏன் நீங்கள் என்னைக் கண்டு ஓட்டம் பிடிக்க வேண்டும்? நான் உங்களுக்கு ஒரு தீங்கும் இழைக்க மாட்டேன். வீரர்கள் கவனிக்கவேண்டிய நியமங்களை நீங்கள் அறியீர்களோ? ஒருவருக்கும் காரணமின்றி கேடிழைக்கலாகாது சிறப்பாக ஸ்திரீகளிடத்தில் மிகவும் மரியாதையாக நடந்து கொள்வது முறைமை. உயர்குடியிற் பிறந்து அந்தஸ்துடைய வராகக் காணப்படும் உங்களிடத்தில் நான் கௌரவமாக நடந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்" என்று கூறினன். இதைக் கேட்ட மாதர்கள் தம்முடல் குலுங்கநகைத்தனர். க்விக்ஸாட் அதற்குப் பொறுமல் வெகுண்டவன்போல், "ஸ்திரீகள் வினயமும் பெருந்தன்மையும் வாய்ந்திருந்தலன்றோ அழகு? காரணமின்றி நகைத்தல் பெரும் பேதைமையாகும். ஆயினும் இங்ஙனங் கூறி உங்களுக்குக் கோபம் மூட்டுவது என் கருத்தன்று. என்கருத்து உங்களைப்போன்ற சீமாட்டிகளுக்குத் தகுந்த பணிசெய்து பெருமையடைய வேண்டுமென்பதே" என்று மொழிந்தான்.

இம்மொழியைக்கேட்டு அம்மாதர் முன்னிலும் அதிகமாகச்சிரித்தார்கள். க்விக்ஸாட்டின் கோபமும் அதிகரித்தது. அச்சமயத்தில் நல்லவேளையாய் சத்திரக்காரனும் வெளியேவர்

தான். வந்தவன் க்விக்ஸாட்டைக் குதிரையை விட்டிறக்கித் தன்னிடமுள்ளதை மனமார வுண்டுசெல்லும்படி வேண்டி யுபசரித்தான். சத்திரத்தைக் கோட்டையென்று கருதியது போலவே க்விக்ஸாட் சத்திரக்காரனைக் கோட்டைக் கவர்னர் (காவலன்) என்றெண்ணி அவனது அடக்கத்தையும் பெருந் தகைமையையும் நோக்கிவியந்து, "காவலரே, உலகத்தில் நான் மேன்மையாக மதிப்பது போர்க்கலங்களே; யுத்தகளமே எனக்கு அமைதியளிக்கும் பேரமளியாம்" என்று கூறினன்.

பின்னர் தன் அற்புத துரகத்தைச் சரியாய்க் கவனிக்கும்படி க்விக்ஸாட் அச்சத்திரக்காரனை வேண்டினன். சத்திரத்திற்குள் நுழைந்ததும் இரண்டு ஸ்திரீகளின் உதவியால் தான் அணிந்திருந்த கவசத்தைக் களைந்தான். ஆயினும் தலைச்சீராவை மட்டும் எடுக்கமுடியவில்லை; ஏனெனில் அது நாடாவினுல் இறுகக்கட்டப்பட்டிருந்தது. முடிகளும் சிக்கிக் கிடந்தமையால் அப்பிணிப்பைக் கத்தியால் அறுத்து தலைக் கவசத்தை அப்புறப்படுத்த க்விக்ஸாட் விரும்பவில்லை. ஆகையால் அதைக் களையாமலே சத்திரக்காரனும் பெண்களும் கொண்டு பரிமாறிய வுணவை யருந்தினன்.

உண்டி முடிந்ததும் க்விக்ஸாட் சத்திரக்காரனை லாயத் திற் கழைத்துக்கொண்டுபோய் அவன் முன்னிலையில் முழந் தாளிட்டுப்பணிந்து" "தாங்கள் என்மீது தயைபுரிந்து எனக்கு வீரனெனப்பட்டம் சூட்டுவதாக வாக்களித்தா லன்றி நான் இவ்விடம் விட்டுப் பெயரமாட்டேன்; நாளைக்குவேண்டுமானுல் அச்சடங்கை முடிக்கலாம், இன்றிரவு முழுதும் விழித்திருந்து என் கவசங்களைத் தகுந்த விடத்தில் வைத்துப் பாதுகாப்பேன்", என்று உரைத்தான். இவ்வுரை நகைப்பிற் கிடந்தந்ததெனினும் சத்திரக்காரனும் விநோதப்பிரியனுகை

யால் அப்படியே செய்வதாக வாக்களித்து முற்றத்திலேயே கவசங்களை வைத்துப் பாதுகாக்கும்படி ஆஞ்ஞாபித்தான். செலவிற்குப் போதுமான பணமுண்டாவென்று வினவ க்விக்ஸாட் தன்கையில் ஒரு செப்புக்காசுகூட கிடையாதென்று கூறினன். பணமும் தூயவாடையு மில்லாதவன் வீரனுகானென்றறிந்து க்விக்ஸாட் இனிமேல் அவ்விஷயமாய்த்தகுந்த கவனம் வைப்பதாக வாக்களித்தான். பின் முற்றத்தில் ஒரு புறம் வைக்கப்பட்டிருந்த தொட்டியொன்றில் தன் கவசத்தைவைத்து அதன் பக்கத்தில் நின்று கொண்டிருநதான். அப்போது பணியாளனொருவன் கோவேறு கழுதைக்குத் தண்ணீர்காட்டுவதற்காக அங்கு வந்து தொட்டியில் நீருண்டாவென்று நோக்குவதற்காகத் தொட்டியின் மீதிருந்த கவசத்தை யெடுக்க முயன்றுன்.

உடனே க்விக்ஸாட், "வீரனே, பதட்டம் வேண்டாம். உலகில் ஆயுதமெடுத்த வீரர்களுள் முதன்மையானவன் நான் என்பதறியாமலே இக்காரியம்செய்யத் துணிந்தீர். ஜாக்கிரதை. என் கவசத்தை நீர் தீண்டல் தகுதியன்று. மீறி நடந்தால் இவ்வாளுக்கிரையாக வேண்டிவரும் என்றுன்." பணியாளனே இம்மொழியைப் பொருட்படுத்தவேயில்லை.கவசத்தையெடுத்துத் தூரே எறிந்து விட்டான். உடனே க்விக்ஸாட் தன் காதலியின் பெயரால் ஆணையிட்டு பெரிய வீரன்போல் தன் ஈட்டியால் அவ்வேலைக்காரனை ஒருபக்கமாக இடித்துத தள்ளித் தன் கவசத்தை முன்போலவே தொட்டியில்வைத்து ஒன்றுமே நடவாததுபோல் இப்படியும் அப்படியும் உலாவிக் கொண்டிருந்தான்.

இன்னுஞ் சிறிது நேரத்திற்கெல்லாம் வேறொருவேலைக்காரன் அவ்விடம் வந்து கீழேமோதுண்டு விழுநது கிடந்த ஆசாமியைக் கவனியாமலே தொட்டியில் வைக்கப்பட்டிருந்த

கவசத்தை எடுக்க யெத்தனித்தான். உடனே க்விக்ஸாட் கடுஞ்சினங்கொண்டு அம்மனிதனையும் தன் ஆயுதத்தால் தாக்கினான். நோய்க்காற்றாது அரற்றிய அச்சேவகனின் குரல் கேட்டு சத்திரக்காரனும் உள்ளேயிருந்தோரும் அவ்விடம் ஓடிவந்தனர். வந்து கற்களைவாரி அவன்மீது வீசியெறிந்தனர். க்விக்ஸாட் தன் ஊக்கத்தைக் கைவிடாமல் கேடயத்தால் அடிபடாமல் தன்னைக்காத்துக்கொண்டான். தன்னையெதிர்த்தவர்களை துரோகிகளென்றும் பாதகரென்றும் ஏசிக் கோட்டைக்காவலன் வீரனாகிய தன்னைத்தகுந்தபடி உபசரியாது அவமதித்ததற்காக அச்சத்திரக்காரனையும் தூஷித்தான். க்விக்ஸாட்டின் தைர்யத்தைக் கண்டு சத்திரக்காரனும் அவனை மெச்சிக் கொண்டாடியதுமன்றி அங்குள்ளவர்களைச் சும்மா நிற்கும்படி ஏவிச் சண்டையை அவ்வளவோடு நிறுத்தினான்.

ஸ்வாமி தயானந்த சரஸ்வதி.

Swami Dayanand Saraswati

ஸ்ரீமான் T. R. ராஜகோபால ஐயர் எழுதியது.

(தொடர்ச்சி)

அவ்விக்கிரஹங்களுக்குள் ஜகதீசனுடைய பராக்கிரமும் மாக்ஷிமையும் தங்கியிருக்கின்றன, என விடையளிக்க, இவருடைய மனம் சமாதானமடையாது. மேன்மேலும் அதைப்பற்றியே விசாரிக்கத் தொடங்கினர். சின்னாட் சென்றபின், இவருடன் மிக்க அன்புடன் பழகிய சகோதரியும், இவரைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த மாமனும் இறக்கவே, இவ்வுலக வாழ்க்கையின் மீது இவருக்கு வெறுப்புத் தோன்றி, கானகத்திற்குச் சென்று யோகாப்பியாசத்தினால் உண்மையை யறியவேண்டுமென அவாவி வெளிபபுறப்பட்டார். தக்க குருவை நாடி நாடுகள் தோறும் அலைந்து வர, கடைசியில், தன்னுடைய 36-ம் வயதில், மெய்ஞ்ஞானியான ஸ்வாமி விரைஜ்ஞானந்தரை இவர் சரணமடைந்து உபதேசிக்கப் பெற்றார். "பாரத யுத்தத்திற்கு முன் இந்தியா தேசம் உச்சதசை யுற்றுப் பிரகாசித்தது. அதற்குப் பின்தான், மெய்ஞ்ஞானத்தைப் புகட்டக்கூடிய வேதங்களையும்—இதர மெய்த்தத்வ நூற்களையும் — கொள்கைகளையும் துறந்து, பொருட் செல்வம்-புகழ்-தற்சிந்தனைகளையே நிரம்பப்பெற்றவர்களால் எழுதப்பட்ட போலித்தத்வப் புத்தகங்களையும் - பொய்யும் இழுக்கும் பூரித்துள்ள வியாக்கியானங்களையும் பின்பற்றிய நாள் முதற்கொண்டு நமது இந்தியா கெட்டழிந்தது. நாமருடங்களுக்குட்டாத் ஜகதகாரணனை சிலாவிக்

கிரஹங்கள் மூலமாகத் தொழுதல் தவறு. நான்கு வருணங்களைத் தவிர வேறில்லை. இவ்வருணங்களும் குணம்-கர்மம்-சுவபாவங்களுக்கேற்ப வகுக்கப்பட்டுள்ள," என்பன வாதிகளை அக்குருவினிடமிருந்து நமது தயானந்தர் கேட்டறிந்தார். சாதுர்ய புத்தியமும், ஞான வளப்பமும், சமநோக்கமும், போதன சக்தியும், அஞ்சாமையும் பூரணமாகப் பெற்றுள்ள நமது தயானந்தரையே அக்குரு தன்னுடைய பல சிஷ்யர்களிலிருந்து தேர்ந்தெடுத்து, ஆசீர்வதித்து, மேற்கூறியவைகளைத் இந்தியர்க்கு போதித்து அவர்களை திருத்தி உபகரிக்குமாறு வெளியனுப்பினர்.

"ஆரிய சமாஜம்" ஒவ்வொருவனுடைய வாழ்வின் பலன் அவனுடைய சொற்செயற்களின் வாயிலாக இப்புவியின்மீது நின்று நிலவுகின்றது. சரீரம் அழிவதானாலும், ஆன்மா நிதநியமானது. ஜீவனுடைய தோற்றம், மின்னலைப் போல், க்ஷணப்பொழுதில் மறைவதாயினும், அது முடிவுறுவதில்லை மின்னலினின்று இடியும் மழையும், இவைகளினின்று பல்வேறு பொருள்களும் உண்டாவனபோல் ஜீவான்மாவானது இப்புவியில் தோன்றி, ஓர் தேகத்தைப் போர்த்து, இவ்வுலக வாழ்க்கையை நடாத்திவருகையில், அது சிந்தித்த எண்ணங்கள்- சொல்லிய மொழிகள்-செய்த தொழிற்கள் எழுதிய இலக்கியங்கள் யாவும் நாட்குநாள் ஓங்கி வளர்ந்து பரவுகின்றன இவ்வாறே, நமது தயானந்தா பலநூற்கள் வரைந்து, உபதேசங்கள் செய்ததுடன், இந்தியர்கள் எப்பொழுதும் மறக்கக் கூடாவண்ணம் "ஆரிய சமாஜம்" என்ற ஓர் சங்கமும் ஏற்படுத்தி யிருக்கிறார்.

இந்தியாவின் எல்லா பாகங்களிலும் வேததர்மங்களை வியாபிக்கச் செய்து, விக்கிர ஆராதனையையும்-உபயோகமற்ற சடங்குகளையும் கண்டித்து ஒழித்து, சிறுவர்- சிறுமியர்

களுக்கு வேண்டிய பள்ளிகளை எழுப்புவித்து அநாதாச்ரமங் களையும் தர்மசத்திரங்களையும் கட்டுவித்து, புத்தகசாலைகளை ஏற்படுத்தி, அவிவேகத்தை முறித்துத் தள்ளி, விவேகம் பரவுமாறு தினவர்த்தமானப் பத்திரிகைகளையும் அறிவு நூற்களையும் பிரசுரித்து உதவுவதாகும் மேற் சொல்லிய சமாஜம். இன்னும், சிறுவயதிலேயே விதவையான பெண்களை முறைபிறழாதபடிப் பரிபாலித்தும், "மிலேச்சர்-சண்டாளர்-பறையர்" என அவமதித்து மிதிக்கப்பட்டுவரும் பேதைகளுக்கும் கல்விகற்பித்து உயர்த்தியும் இருந்துவருவதே இந்த சமாஜத்தின் நோக்கம். 1875-ம் ஆண்டில், முதலில் பம்பாயிலும், பின், 1877-ம் வருடத்தில் லாகூரிலும் இது ஸ்தாபிக்கப்பட்டது.

"சத்தியார்த்த பிரகாசம்." 1875-ம் வருடத்தில், ராஜா ஜெயகிருஷ்ண தாஸரின் வேண்டுகோளுக்கிணங்கி "சத்தியார்தத பிரகாசம் என்ற ஓர் நீதிநூலை இவர் எழுதி வெளிப்படுத்தினர். இந்நூலில், மனிதனுடைய நியமங்களைப் பற்றி மிக்க சவிஸ்தாரமாக அறிவித்திருக்கிறார். மதம்-தத்வம்-ஸ்வதர்மம் மோக்ஷ தர்மம்-ராஜதர்மம் முதலானவைகள், யாவரும் எளிதில் தெளிவாக அறியக்கூடிய நடையில், எழுதப்பட்டுள. இந்நூலின் பாயிரத்தில், பிறர் மனத்தைப் புண்படுத்தல் தன் கருத்தல்லவெனவும், பாமர-பண்டித சர்வஜனங்களும் மெய் பொய்- கிரமம் அக்கிரமமாதியவைகளின் வித்தியாசங்களையும் குணாதிசயங்களையும் திடமாக அறிந்து, மறத்தை விலக்கி அறத்தைக் கைக்கொண்டு ஒழுகி உய்யவேண்டுமென்பதே தன்னுடைய அந்தரங்க எண்ணமெனவும், கலைஞர்-மௌட்டியர் அனைவரும் துராபிப்பிராயம் - பிடிவாதங்களுக்குட்பட்டு உண்மையறியாது சீர்கெடுவதால், அவைகளின் தீமைகளைப் பகிரங்கப்படுத்தி, தூய்மையும் - நேர்மையும் - வாய்மையும்

பொருந்திய விஷயங்களைத் தெரிவித்தலே தன்னுடைய உள்ள விருப்பமெனவும் காட்டி யிருக்கின்றார்.

ஒப்புவமையற்றுத் தன்னந் தனிமையாய், மனோவாக்கு களுக் கெட்டாததாய், அணுவுக்கும் அணுவாய், மகத்துக் கும் மகத்தாய், ஞானம் நிறைந்ததாய், அருட்சாகரமாய் விளங்கும் பரம்பொருள் ஒன்றே. அதையே ஒவ்வொருவ னும் தன் மனத்துள் தியானித்து வரவேண்டும். பிரகிருதி யைத் தொழுபவர் அஞ்ஞானவிருள் சூழப்பெற்றவர். அப் பிரகிருதியின் தோற்றங்களான பூமி - ஆகாயம் - மாஞ்செடி ஆறு - விக்கிரஹங்களைப் பூஜிப்பவர் அவர்க்கும் கடையரா னவர். பரம்பொருள் நாமரூபங்களுக்குட்பட்டதும் படி வதுமல்ல. நம்முடைய நான்கு வேதங்களிலும் உள்ளவை களேயே நாம் அறிந்து அநுஷ்டிக்க வேண்டும் ஒவ்வொரு வரும் அவ்வவர்க்கான கடமைகளைத் தெள்ளிதின் அறிந்து, வைராக்கியத்துடன் பற்றித் தொடர்ந்து சுறுசுறுப்புடன் உழைத்தலே பிரார்த்தனை என்பது; இதுவே ஜயத்திற்கும் ஆனந்தத்திற்கும் மூலாதாரமாவது. அநித்தியமானவைகளில் நித்திய வஸ்துவையும், மாறுபடுபவைகளில் சலனமில்லாது ஒரு படிக்காக இருப்பதையும் அறிதலே ஞானம். பிறப்பிறப் புக்களின் வசப்படாதலே மோக்ஷம்-முக்தி - சுதந்தரம் என் பது அறநெறி பிசகாதவரும், சதாகாலமும் கடவுள்பால் மன ஹிருதயங்களைச் செலுத்திப் பரோபகாரிகளாக விளங்குப வருமே மோக்ஷத்திற்கும் சுதந்தரத்திற்கும் உரித்தானவர்கள். மிதமீறிய ஆசையும், முற்றத்துறவும் இன்பத்திற்கும் பிற நலத்திற்கும் சகாயமானவையல்ல. முரட்டுக் குதிரைகளை எவ் வாறு புத்தியுள்ள சாரதி அடக்கி ரதத்தை செலுத்துகின் றானோ, அவ்வாறே ஒவ்வொருவனும் ஐம்புலன்களையும் திருத்தி யடக்கி, மன ஹிருதயங்களைக் கல்வியினாலும் நல் லோர் கூட்டுறவினாலும் உயர்த்த வேண்டும். சிந்தனை-சொற் செயற்களில் தூய்மையும் வாய்மையும் நிரம்பியவனா யிருக்க வேண்டும்.

(தொடரும்)

இரண்டாம் அங்கம்

முதற் காட்சி.

இடம்:—பூம்புகாரில் அரமனைப் பூந்தோட்டம்.

காலம்:—பிற்பகல்.

அரங்கநிலை:— உதய குமாரன் உலாவிக்கொண் டிருக்கிறான்;
பணியாளன் வருகிறான்.

உதயகுமரன்:—வந்து விட்டாளோ?

பணியாள்:— வரவில்லை இன்னும்.

உதய:—அந்த மூலைதான் வரும் வழி; அங்கு நீ
காத்திருந்து, இங்கு கடிது அழைத்து வா;
வேற்றாள் அறிய வேண்டாம்.

பணியாள்:— சித்தம்.

[பணியாளன் போகிறான்.]

உதய:— (தனிமொழி)

கன்னிக் காதல் ஓர் கன்னிகைமேல் தாழ்ந்தது!
என்ன புதுமை இதுதான்! ஒரு கால்,—
இல்லை, இருமுறை என்னலாம்,—என் உளம்
மெல்லியர்க் கண்டு விழைந்துளது இதன் முன்:
அவ்விரு சமயமும், அரசு இயற்கு ஒவ்வாச்
செவ்வி அறிந்த கணமே திருத்தி,
மலரா முகை என, முதிரா பிஞ்சு என,
அடங்கி அவிந்தது காதல்; அது போல்
தொடங்கியது அன்று இது, தொலைவதும் அன்றால்.
கண்கள் கலந்தது ஒருகணமே; அதில்
பெண்களை வாடினள் பெரிய என் மனமெலாம்!
இருபொழுது ஆயிலது எனினும், இவ் இடைதான்,
அரிதினில், ஊழியின் அசைந்து கழிதரும்!
உண்ணேன், உறங்கேன், ஒன்றே நினைவு;
கண்ணேர் காட்சியும் கவின் ஒரு வடிவமே!

நெடுநாள் பழகிப் பிரிந்தது ஓர் நேயக்
கடுமையின் அன்றோ கவிந்தது என் உள்ளம்!
[பணியாள் திரும்பி வருகிறான்.]

வந்து விட்டாளா?

பணியாள்:— இல்லை; மற்று, அவள்
சொந்தப் பாட்டியாம், வந்து நிற்கிறாள்

உதய:—பாட்டியா? சரிதான்; வரச் சொல், பார்ப்போம்.
[பணியாள் போகிறான்.]

(தனிமொழி)

நாட்டினை ஆளும் நாபதி மகன் யான்,
அரசுக்கு உரியவன், அறியாதவனும் இல்;
வரைவில் பொதுமகள் அவள்; மற்று, இதுதான்,—
[சித்திராபதி வந்து வணங்கி நிற்கிறாள்.]

ஆர் நீ?

சித்திராபதி:— அடியாள் ஆடற் கணிகை;
பேர் சித்திராபதி.

உதய:— பிற்றை இரவினில்
அரங்கேறியவள்?

சித்தி:— அடியாள் பேர்த்தியே.

உதய:—அவள் ஏன் வந்திலள்?

சித்தி:— அறியாப் பிள்ளை;—

உதய:—அரங்கேறினளே?

சித்தி:— ஆம் அது மெய்தான்;
அவள் தாய் மாதவி அரங்கேறிய பொழுது,
அன்றே மாலையும் விற்றேன்; அவள்போல்
இவளும் பெரியவளே;—

உதய:— பின் ஏன் நீ
இன்று இங்கு உன்னுடன் இட்டு வந்திலை?

சித்தி:—சமுகத்து ஆக்கினை கிட்டிய சமயம்,—

உதய:—என்ன? ஏன் திகைக்கிறாய்?

சித்தி:— எப்படிச் சொல்வேன்?
எட்டி குமரர் 'ஏழாயிரம் பொன்
கட்டித் தருகிறேன்' என்று கட்டாயமாய்ச்

செய்தி அனுப்பினுர்; சின்னவள் இணங்கிலள்;
மதனைக் கண்டபின் மற்று விரும்புமோ ?

உதய:— ஆயின் அவட்கும் என் மேல்;—

சித்தி:— அமோகம்;
மாய்கிருள் மயலால்.

உதய:— பின்னை ஏன் வந்திலள் !

சித்தி:—அவள் பிதா, என் மகள் மாதவி அன்பன்,
பெருங்குடிக் கோவலன் செட்டி, பிற்றையாண்டு,
அரும்பொருள் அனைத்தையும் அவலமாக்கி, என்
ஏழைக் குடியையும் பாழாக்கியபின்,
கோழையன், பெண்டொடும் கூடல் ஏகினுன்;
விலை மகள் எனினும், குலமகள் போல
வருந்தி நோற்றிருந்தாள் என் மகள் மாதவி;—
என்வயிற்று இயல்பு அது, என் குடி மரபு;—
திருவிழாப் பார்க்க இரவு நான் சென்றேன்;
கோவலன் மதுரையில் கொலையுண்டான் என
எவரோ வந்து என் வீட்டில் இசைத்திட,
தாயும் மகளும் சகிக்கொணுத் துயரொடு
தூய அறவணர் சூழல் புகுந்தனர்.
இன்று யான் காணச்சென்றபோது, என்னையும்
மறுத்து விட்டனர்; வருத்தம் அப்பெரிது;
பொறுத்துச் சிறிது,—

உதய:— பௌத்த விஹாரம்
மணிமேகலையுமா புக்கனள் ?

சித்தி:— மகிப !
தணிக வெம்தாபம்; சற்றுமுன் மாதவி
தோழியை அவர்பால் தூது விடுத்துளேன்;
வாழிநின் வரைத்தோள் மணிமேகலையைச்
சேர்க்குவென் இன்னும் இரண்டு ஒரு தினங்களில் ;
பார்க்க என் திறம் !

உதய:— பாட்டி ! நீ தான்
பெரிய என் காதற்கு உரியது ஓர் தஞ்சம்.
பௌத்த விஹாரமா புக்கனள் சுந்தரி !

சித்தி:—பார்த்திப! உன் திருவாயால் 'பாட்டி' என்று
உரிமையின் அழைத்த ஒன்றே போதுமே;
இனி உன் மார்பகம் சின்னவள் இன்துயில்
கனிவுறுகாறும், என் கண்களும் துயிலுறா.
[பணியாள் விரைந்து வருகிறான்.]

உதய:—என்ன? எங்கு உற்றாய்?

பணியாள்:— மன்னரும் தேவியும்
வருகிறார் இவ்வழி.

உதய:— சரி; நீ போய் விடு.
விரைவில்; இன்று இரா மீண்டும் எய்தி, மேல்
செய்தி உரைத்துச் செல்லுக; வல்லையேல்,
அழைத்து வருக.

சித்தி:— அடியாள் வருகிறேன்;
தயவு இருக்கட்டும்; சமூகத்து அடிமைகள்
[சித்திராபதியும் பணியாளும் வணங்கிவிட்டுப் போகின்றனர்.]

உதய:—(தனிமொழி) பிழைத்திறன் பெரிதாம் பெற்றவர்
[அறிந்திடின்;
பயமுறும் நெஞ்சம்;.................
விலைம்கள் தானே! குலமகள் இல்லையே?
ஊரில் எவருமே கொள்ளலாம் ஒன்றைப்
பாருக்கு உரியவன் கொளல் பழியாமோ!
என் உளம் படும்பாடு அறியின், என் தாய்
மன்னவர்க்கு உரைத்து, மாற்றிடும் அவர் சினம்
நண்ணினள் பௌத்த விஹாரம்; நான் இனி,—
[மாவண்கிள்ளியும் சீர்த்தியும் வருகின்றனர்,
அவரை உதயகுமரன் வணங்குகிறான்.]

உதய:—அண்ணா, வந்தனம்! அம்மா, வந்தனம்!

மாவண்கிள்ளி:—
சீர்த்தி:— } :—வாழி நீ ஊழிகாலம், மகனே!

சீர்த்தி:— ஏன் இவ் வாட்டம், குமரா! இங்குவா,—
மேனியும் முகமும் வெளிறிக் காண்பதேன்?

உதய:—ஒன்றுமே இல்லை, அம்மா! என் உடம்பு
என்றும் போல்தான் இருக்கிறது.

சீர்த்தி:— இல்லை; உன்
கண்களும், உறங்காதன போல் கலங்கி,
மங்கிக் காணுவ; ஏன் இவ் வாட்டம்?

உதய:—எதுவுமே இல்லை,

[சோழிக ஏனாதி விரைந்து வந்து வணங்குகிறான்.]

மாவண்:— என்ன விசேஷம்?

சோழிக ஏனாதி:—அதிபதி வாழி! அரமனை யானை

"கால வேகம் களிமயக்கு உற்று,
நீல மால்வரை நிலனொடு பெயர்ந்தென,
காழோர் கையற, மேலோர் இன்றி,
பாகும் பறையும் பருந்தின் பந்தரும்,
ஆதுல மாக்களும் அலவுற்று விளிப்ப,
பாகின் பிணவையில் பணைமுகம் துடைத்து,
கோவியல் வீதியும் கோடித்தேர் வீதியும்,
பீடிகைத் தெருவும் பெருங்கலக்கு உறுத்தாங்கு;
கூம்பு முதல் முறிய, வீங்கு பிணி அவிழ்ந்து,
கயிறு கால்பரிய, வயிறு பாழ்பட்டு,
இதை சிதைந்து ஆர்ப்பத், திரை பொரு முந்நீர்
இயங்கு திசை அறியாது, யாங்கணும் ஓடி
மயங்கு கால் எடுத்த வங்கம் போல,
ஒரு பால் படாஅது, ஒரு வழித் தங்காது,"
பதியெலாம் கலக்கிப் பாழ்செயும்.

உதய:— யான் சென்று
அதன் மதம் அடக்கி மீளுவேன், அண்ணா!

சீர்த்தி:—கோளாறு உற்றுளது உன் உடல், குமரா!
ஆளா நமக்கிலை? அரமனைக் காவலர்
தலைவன் சென்று அத் தந்தியை அடக்குவான்.

உதய:—இல்லை கோளாறு எதுவும்; யானே
செல்கிறேன், அம்மா. தீரச் செயல்களில்
பிறரை ஏவுதல் பெருமை உடைத்து அன்று;
அறமும் அன்று அரசர்க்கு; அன்றியும், அவன் ஒரு

முரட்டன்; நயமிலா மொய்ம்பினன்; யானையின்
கரடகம் அடக்கிட உயிரையே களைகுவன்;
விடை எனக்கு அருளுக, வேந்தே!

மாவண்:— குமர!
இடவினை யாவும் தானே செயமுயன்று
இடருறல் இறைமுறை அன்று, இழிமதியே;
பிறர் உடல் மூளை வலிதரு பேறெலாம்
இறைவன் உரிமை ஆதலின், இடம் பொருள்
காலம் கருவி வினை இவை கருதிக்
கோலை நடாத்திக் கோமுறை கோணாது,
அவர் அவர்க்கு உரிய பரிசுகள் அளித்து,
கவையற ஓம்பிக், குடிகள் களிப்பதைக்
கண்டு தான் களிப்பதே காவல் எனினும்,
வேண்டி இப்பணி நீ விரும்பின், வேண்டிய
படைத்துணையோடும் பதனமாய்ச் செல்லுக.

சீர்த்தி:—பத்திரம், குமரா!

[உதயகுமாரனும் சோழிக வேனதியும் வணங்கிவிட்டுப் போகின்றனர்.]

பயமே இல்லையே!

அப்பனைப் போல பிள்ளை.

மாயவன்:— ஆகுக!
ஒப்பனை முற்றிலும் ஒக்கின் உத்தமமே.

சீர்த்தி:—அத்தன் அங்ஙனம் அருளிடும்; ஐயமேன்?

[இருவரும் போகின்றனர்.]

இரண்டாம் அங்கம் முதற்காட்சி முற்றிற்று.

இரண்டாம் காட்சி.

இடம்:—பூம்புகார் பௌத்த விஹாரத்தில் உபாஸிகைகளின் இருக்கை.

காலம்:—மாலை.

அரங்க நிலை:—மணிமேகலையும் சுதமதியும் பூத்தொடுக்க, மாதவி அவர்கள் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறாள்; அறவண அடிகள் வர, மூவரும் எழுந்து அவரை வணங்குகின்றனர்.

அறவண அடிகள்:—என்ன மாதவி, இன்னும் நீ வாளா
வருந்துகின்றனை? பொருந்திலை அமைதி?
அன்று கூறியது இன்றும் கூறுவல்:
"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்;
பிறவார் உறுவது பெரும்பேர் இன்பம்
பற்றின் வருவது முன்னது; பின்னது
அற்றோர் உறுவது; அறிந்து இவை தெளிந்து,
ஐவகைச் சீலத்து அமைதியின் ஒழுகுதல்
உய்வகை," பிறிது ஒன்று இல்லை; இஃது உறுதி.

மாதவி:—அடிகள் அறிந்தேன்; ஆயினும் என் துயர்
மடியாது என்னை வருத்தும்; பேதையேன் என்செய?

அறவ:—மனத்தை அடக்குதல் எளிது அன்று;
உன்துயர் பெரிதே எனினும், ஓர் உபாயம்
ஓதுவல்; தனது அலையாது ஒரு பணியில்
கருத்தையும் கையையும் பொருத்தி உழைக்குதல்
சாதகம் ஆகும் மாதுயர் தணித்திட;
ஆதலின், அறவோன் அடிகளை நினைந்து,
தூமலர்த் தொடையல் நீயும் தொடுக்குக;
வாளா இருத்தல்தான் மாளாத் துயர்தரும்;
கையறு மடியே வெய்யதீ வித்து,

மாதவி:—செய்கிறேன், அடிகளே!

அறவ:—செய்து பார்.சில நாள்.

[அறவண அடிகள் போக மூவரும் உட்காருகின்றனர்.]

மாதவி:—சுதமதி! பிச்சி மலரை நான் தொடுக்கிறேன்;
இங்கு எடு கூடையை.
[சுதமதி மலர்க்கூடையை எடுத்துக்கொடுக்க.
மாதவியும் பூத்தொடுக்கிருள்]
என்ன வாசனை!
இதழ்கள் சிறியன, சிலவே, எனினும்,
தங்கு கரையிலை கந்தம் மாத்திரம்;
பிச்சியே அதிகப் பிரியம் அவர்க்கு.
[வசந்தமாலை வருகிருள்.]
வா, இரு, வசந்தா.

வசந்தமாலை:— வந்தேன், அக்கா!
நீ இங்கு உற்றபின், நின்னையும் அவளையும்
காண வந்த நின் தாயையும் கணித்திலை;
"தேவர் கோர்ந்த எடுத்த தீவகச் சாந்தி" ச்
சேவகம் ஒழியக் காணவும் சேர்ந்திலை;
தன்னொடும் போகாது, அவளும் தவத்துறை
துன்னிட. ஒறிதே தொலைவுறும் வாழ்நாள்.
மாண்டவ நீளா மாட்சிமை தெளிந்தும்
ஈண்டு உளா இனிது இவண் வாழ்கிலராயின்,
என்னும் உலக வாழ்க்கை தான்? எண்ணுவை.
"உன்னோடு இவ் ஊர் உற்றது ஒன்று உண்டு கொல்?
நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்தன
கற்றுத் துறைபோகிய பொற்றொடி நங்கை
நற்றவம் பூண்டது நாண் உடைத்து" என்றே.
அலகில் மூதூர் ஆன்றவர் அல்லது
பலர் தொகுபு உரைக்கும் பண்பில் வாய்மொழி
நயம்பாடு இல்லை; நாண் உடைத்து அன்றே."

மாதவி:—"காதலன் உற்ற கடுந்துயர் கேட்டும்
போதல் செய்யா உயிரொடு நின்றே,
பொற்கொடி மூதூர்ப் பொருள் உரை இழந்து,
நற்றொடி நங்காய்! நாணுத் துறந்தேன்"
இன்று அல, அன்றே இழந்தேன் நற்பெயர்.

வசந்த:—உன்னொடும் போகாது, உன் மகள் சின்னவள்
தன்னையும் தவத்துறை இறக்குதல் தகுமோ!